stock file-49- 13

சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – சேலம் மாவட்டம் – அனுமதிக்கப்பட்ட 18 அரசு தரப்பு பணியிடங்களுக்கான ஊதியத்தை பிற ஊராட்சி ஒன்றியங்களில் உள்ளதுபோல் கருவூலத்திலிருந்து ஊதியம் வழங்க அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது – திருத்தம் – ஆணை வெளியிடப்படுகிறது.

5874

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.அ–5) துறை

அரசாணை (ப) எண்.505 நாள்: 14.12.2016.

படிக்கப்பட்டவை:

(1) அரசாணை (ப) எண்.29, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 20.01.2014.

(2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க. எண்.27461/2013/ப.ரா.1.3, நாள் 06.06.2014 மற்றும் 22.11.2014.

* * * * *

ஆணை:

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்கண்ட பதவிகளில் அனுமதிக்கப்பட்ட 18 அரசுத் தரப்பு பணியிடங்களுக்கான ஊதியத்தை பிற ஊராட்சி ஒன்றியங்களில் உள்ளது போல் கருவூலத்தில் இருந்து ஊதியம் வழங்க அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

| | |
|---|---|
| வட்டார வளர்ச்சி அலுவலர் | 2 |
| துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 4 |
| உதவியாளர் | 5 |
| ஊர்நல அலுவலர் | 2 |
| விரிவாக்க அலுவலர் | 1 |
| உதவி/ஒன்றிய பொறியாளர் | 2 |
| பணிமேற்பார்வையாளர் | 2 |
| | 18 |

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 18 அரசுத் தரப்பு பணியிடங்களில் கீழ்க்கண்ட பதவிக்கான ஊதிய விகிதத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

(த.பி.பா.)

| வ. எண் | அரசாணையின் படி வரிசை எண் | பணியிடத்தின் பெயர் | பணியிடம் எண்ணிக்கை | அரசாணையில் குறிப்பிட்ட ஊதிய விகிதம் | திருத்தம் மேற்கொள்ள வேண்டிய ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 13 | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) | 1 | 9300–34800 +4800 G.P. + 500 PP | 9300–34800+ 5100 தரஊதியம் +1000 சிறப்பு படிகள் (Special Allowance). |

எனவே, மேற்காண் அரசாணைக்கு உரிய திருத்தங்கள் வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், வரிசை எண்.13–ல் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலரின் (கிராம ஊராட்சி) பணியிடத்திற்கு தர ஊதியம் மற்றும் சிறப்பு ஊதியம் ஆகியவற்றுக்கு கீழ்கண்டவாறு திருத்தம் வெளியிட்டு அரசு ஆணையிடுகிறது.

| அரசாணையில் உள்ளபடி ஊதிய விகிதம் | திருத்தம் |
|---|---|
| ரூ.9,300–34,800+4,800 G.P. +500 P.P. | ரூ. 9,300–34,800+5,100 தர ஊதியம் + 1,000 சிறப்பு படிகள் (Special Allowance). |

4. இந்த அரசாணையானது நிதித் துறையின் அ.சா.கு.எண்.63043/RD/16, நாள் 28.11.2016ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் மாவட்டம்.
வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஏற்காடு ஊராட்சி ஒன்றியம், ஏற்காடு, சேலம் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 6/8/35.
இயக்குநர்,
கருவூலம் மற்றும் கணக்குகள் துறை, சென்னை – 15.
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, சென்னை–108.
மாவட்ட கருவூல அலுவலர், சேலம்.
சார்நிலை கருவூல அலுவலர், ஏற்காடு, சேலம் மாவட்டம்.
<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
நிதித் (ஊ.வ. (ம) ஊ/வரவு (ம) செலவு பொது I / மற்றும் பொது II) துறை,
சென்னை – 9.
இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.